(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 10 (4).]

# பாராளுமன்றம்

## 10 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 பெப்புருவரி 28 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 மார்ச்சு 18, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3695/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை வங்கியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இலங்கை வங்கியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டது என்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக இலங்கை வங்கியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 மார்ச்சு 19, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2713/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபைக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டு வரமுன், அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளருடனான முதல் சந்திப்பு உத்தியோகபூர்வமாக எப்போது இடம்பெற்றது என்பதையும் ;

(ii) இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களையும்;

(iii) மேற்கூறிய சந்திப்பின் பின்னர், மேற்கூறியவாறான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டுவரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கையைப் பொறுத்தவரை புறக்கணிப்பு, அகந்தை, செயற்திறனின்மை என்பன மேற்கூறிய தீர்மானத்தில் இலங்கைத்தரப்பு தோல்வியடைய காரணமாய் அமைந்தனவா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துடன் தொடர்புடைய, இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட தகுந்த நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, 2012 மே 18 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளர் திருமதி ஹிலரி கிளின்டனைச் சந்திக்க ஏன் இணக்கம் தெரிவித்தது என்பதையும்;

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அச்சந்திப்பின் பிரதிபலனாக தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.207/ '14

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ புத்திக பதிரண

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ நலின் பண்டாற ஜயமஹ

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ ஏ. டி. சம்பிக பிரேமதாச

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ கபீர் ஹஷீம்,— அரசாங்கம் மீது நம்பிக்கையின்மை,— தென்கிழக்கு ஆசியா வளைகுடாக் கரையோரம் ஆகியவற்றில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச போதைப்பொருள் வர்த்தகக் கூட்டணியொன்று இருப்பது பற்றி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஏனைய நாடுகளின் பொலிஸ் புலனாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளமையினாலும்;

ஆப்கானிஸ்தானில் உற்பத்தியாக்கப்பட்ட ஹெரோயின்,

(1) பாக்கிஸ்தானுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும்;

(2) பஞ்சாப் எல்லையினூடாக பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு கொண்டுவரப்படுவதாகவும்;

இறுதியாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவதன் மூலம் தெற்காசியாவின் ஏனைய பகுதிகளுக்கு ஹெரோயினை வழங்குவதற்கான கேந்திர நிலையமாக இலங்கையை உருவாக்குவதாகவும் புலனாய்வுகள் தெரிவிப்பதனாலும்;

இந்தப் போதைப் பொருள் வர்த்தகக் கூட்டணி குறித்த பிராந்தியத்தின் நலனுக்கு ஓர் அச்சுறுத்தலாகியுள்ளமையினாலும்;

இந்த வணிகக் கூட்டமைப்பில் பாகிஸ்தான், இந்தியா மற்றும் இலங்கைப் பிரசைகளின் ஈடுபாட்டை புலனாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளமையாலும்;

இலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இத்தகைய போதைப் பொருட்கள் கிடைப்பதனால் இளம் தரப்பினரின் ஹெரோயின் நுகர்வில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையினாலும்;

பிரதம மந்திரி ராஜீவ் காந்தி அவர்களின் கொலை தொடர்பாக சர்வதேச பொலிஸ் அமைப்பினால் தேடப்படுபவரும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளவருமான குமரன் பத்மநாதன் என்பவர் அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் இலங்கையில் வாழ்வதனாலும்;

அபாயகரமான போதைப் பொருட்களைக் கொண்டிருந்த கொள்கலன் ஒன்றை விடுவிக்குமாறு பிரதம அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஈஸ்ட் ஏசியா கேட்வே டேர்மினல் (East Asia Gateway Terminal) எனும் கம்பனியின் முகாமையாளருக்கு 2013 ஆகஸ்ட் மாதத்தில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாலும்;

இந்த கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் உள்ள ஒருங்கிணைப்புச் செயலாளரின் குற்றத்துணைமை, 2013 திசெம்பர் 9 ஆம் திகதிய அவரின் இராஜினாமா மூலம் சான்றுப்படுத்தப்பட்டுள்ளமையாலும்;

இந்த வர்த்தகக் கூட்டமைப்பை இல்லாதொழிப்பது பற்றி இந்தியா மற்றும் பாகிஸ்தானிலுள்ள அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புச் செய்வதற்கு அரசாங்கம் தவறியுள்ளமையாலும்;

பெருமளவிலான போதைப்பொருட்கள் நாட்டினுள் கடத்தப்பட்டுள்ளமையைக் கண்டுபிடித்தல் பற்றிய முழு அளவிலான விசாரணையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தவறியுள்ளமையாலும்;

இலங்கையில் போதைப் பொருட்களை வழங்குவதை இல்லாதொழிப்பதற்கான அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையாலும்;

இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் அரசாங்கம் விருப்பமின்றியிருப்பது போல் தோன்றுவதாலும்;

சோதனைகளின்றி கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட அண்மைக்கால அறிக்கைகளில் புலப்படுவது போல், இத்தகைய அச்சுறுத்தல் தணிக்கப்படாது தொடர்வதாகத் தோன்றுவதாலும்;

இது 2500 வருடங்களுக்கும் மேற்பட்ட பெருமைக்குரிய வரலாற்றைப் புகழ்ந்து கூறும் இந்நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு அழிவையேற்படுத்தும் முடிவுகளைக் கொண்டுவரும் என்பதாலும்;

இந்நிலைமை தொடருமாயின், இந்நாட்டின் எதிர்காலம் சீர்குலைந்து இலங்கை ஒரு போதைப் பொருள் நாடாகத் திகழும் என்பதாலும்;

இந்நாட்டுப் பிரசைகளின் நலனைப் பேணி மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் ஆற்றல் தொடர்பில் அது நம்பிக்கை இழந்துவிட்டது என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.